## மே – 07 – திங்கள்
## புனித இல்தெசார்
**அல்லேலூயா! ஆண்டவருக்குப் புதியதொரு பாடலைப் பாடுங்கள்: திபா. 149:1**

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 16 : 11–15

பவுல், சீலா, திமோத்தேயு ஆகிய நாங்கள் துரோவாவிலிருந்து கப்பலேறிச் சமொத்திராக்கு தீவுக்கும், மறுநாள் நெயாப்பொலி நகருக்கும் நேராகச் சென்றோம்அங்கிருந்து மாசிதோனியப் பகுதியின் முக்கிய நகரான பிலிப்பி சென்றோம். அது உரோமையரின் குடியேற்ற நகரம். அந்நகரில் சிலநாள்கள் தங்கியிருந்தோம்.ஓய்வுநாளன்று நாங்கள் நகர வாயிலுக்கு வெளியே வந்து ஆற்றங்கரைக்குச் சென்றோம். அங்கு இறைவேண்டல் செய்யும் இடம் ஏதேனும் இருக்கும் என்று எண்ணி அமர்ந்து, அங்கே கூடியிருந்த பெண்களோடு பேசினோம். அங்கு தியத்திரா நகரைச்சேர்ந்த பெண் ஒருவர் நாங்கள் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் பெயர் லீதியா. செந்நிற ஆடைகளை விற்பவரான அவர் கடவுளை வழிபட்டுவந்தார். பவுல் பேசியதை ஏற்றுக்கொள்ளுமாறு ஆண்டவர் அவர் உள்ளத்தைத் திறந்தார்.அவரும் அவர் வீட்டாரும் திருமுழுக்குப் பெற்றனர். அதன்பின் அவர் எங்களிடம், ”நான் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்டவள் என்று நீங்கள் கருதினால் என்வீட்டுக்கு வந்து தங்குங்கள்” என்று கெஞ்சிக்கேட்டு எங்களை இணங்க வைத்தார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தம் மக்கள் மீது விருப்பம் கொள்கின்றார்

### நற்செய்தி : யோவான் 15 : 26 --- 16 : 4

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது: தந்தையிடமிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிற துணையாளர் வருவார். அவரே தந்தையிடமிருந்து வந்து உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார். அவர் வரும்போது என்னைப்பற்றிச் சான்று பகர்வார். நீங்களும் சான்று பகர்வீர்கள். ஏனெனில் நீங்கள் தொடக்கமுதல் என்னோடு இருந்துவருகிறீர்கள்.
”நீங்கள் நம்பிக்கை இழந்துவிடாதிருக்க இவற்றையெல்லாம் உங்களிடம் சொன்னேன்.உங்களைத் தொழுகைக்கூடத்திலிருந்து விலக்கி வைப்பார்கள். உங்களைக் கொல்லுவோர் கடவுளுக்குத் திருப்பணி செய்வதாக எண்ணும் காலமும் வருகிறது. தந்தையையும் என்னையும் அவர்கள் அறியாமல் இருப்பதால்தான் இவ்வாறு செய்வார்கள். இவை நிகழும் நேரம் வரும்போது நான் உங்களுக்கு இவைபற்றி முன்பே சொன்னதை நினைவுபடுத்திக்
கொள்ளுங்கள். இதற்காகவே இவற்றை உங்களிடம் கூறினேன். ”தொடக்கத்திலேயே நான் இவற்றை உங்களிடம் சொல்லவில்லை ஏனெனில் நான் உங்களோடு இருந்தேன்“ என்றார்.

**தியானம் :** இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு தூய ஆவியானவரின் பண்புகளைப்பற்றி எடுத்துரைக்கின்றார். தூய ஆவியானவரின் பண்புகள் இரண்டு வகை 1.உண்மையை வெளிப்படுத்துபவர் தூய ஆவியார். “மற்றொரு துணையாளரை உங்களுக்கு தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன் அவரே உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் “(யோவா.14:16) என்று இயேசு ஏற்கனவே கூறியதை மீண்டும் இங்கு வலியுருத்துகின்றார். இங்கு உண்மை என்பது வாழ்வைப்பற்றிய அடிப்படைக்குறிப்புக்களை அல்லது வாழ்வைச் சரியாக வாழ்வதற்கான நெறிமுறைகளைச் சுட்டிக்காட்டுகிறது. 2.சான்று பகரக்கூடியவர் ”தூய ஆவியார் “ அவர் வரும் போது என்னைப்பற்றி சான்று பகர்வார் என்ற வார்த்தைகள் அவர் இயேசுவுக்கு சான்று பகர்கின்றவர் என்ற உண்மையையும் “ நீங்களும் சான்று பகர்வீர்கள் “என்ற வார்த்தைகள் நாம் இயேசுவுக்குச் சான்று பகர நமக்குத்துணையாய் இருக்கின்றவர் தூய ஆவியானவர் என்ற உண்மையையும் நமக்கு சுட்டிக்காட்டுகின்றன. இந்தச்சான்று பகர்தல் வெறும் வார்த்தையின் வழியாக அல்ல, மாறாக துன்பங்கள், போராட்டங்கள் ,மற்றும் சாட்சிய வாழ்வு ஆகியவற்றில் வழியாகத்தான் என்ற உண்மையை உணர்ந்தவர்களாக எமது வாழ்வு அர்த்தமுள்ள வாழ்வாக வாழ இன்று எம்மை நற்செய்தி வழியாக இயேசு அழைக்கின்றார்.